உறுப்பினர் எந்தவித ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டினை அவையைத் திசை திருப்பும் வகையில் தெரிவித்ததோடு மட்டுமின்றி, அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுப்பினருக்கு தவறைத் திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு அளித்தபொழுதும், அதனைப் பயன்படுத்திக்கொள்ளாமல், தனது தவறினை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை பெறாமல், வேண்டுமென்றே அவையைத் திசை திருப்பும் நோக்கத்தோடு செயல்பட்டுள்ளார். இதுபோன்று, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள் உறுப்பினர்களால் அவையில் தெரிவிக்கப்படுவது, அவை மரபுக்கு உகந்தது அல்ல என்பதாலும், அது அவையை அவமதிப்பதாகக் கருதுவதாலும், எதிர்காலத்தில் உறுப்பினர்களுக்கு ஒரு பாடமாக அமையும் வகையில், திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களை ஒரு நாள், அதாவது 12–4–2010 அன்று மட்டும் பேரவைப் பணிகளில் இருந்து நீக்கி வைப்பது உகந்ததாக இருக்கும் எனக் கருதுகிறேன். எனவே, இதுகுறித்த தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வரலாம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் 12–4–2010 அன்று ஒரு நாள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கும்மிடிப்பூண்டி சட்டப் பேரவைத் தொகுதி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் 5–4–2010 அன்று அவையில் திருவள்ளூர் மாவட்டம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் குறித்து ஒரு தவறான தகவலை எவ்வித ஆதாரமும் இன்றி அவையில் தெரிவித்தார். இதனை மறுத்து, அதற்குரிய புகைப்பட ஆதாரங்களுடன் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகும், அவர் ஏற்றுக்கொள்ளாது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொள்ளாமல், தனது தவறினை ஏற்றுக்கொள்கிற மனப்பான்மை பெறாமல், அவையைத் திசை திருப்பும் நோக்கோடு செயல்பட்டுள்ளார். இதுபோன்ற ஆதாரம்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 ஏப்ரல் 8

இல்லாத குற்றச்சாட்டுகள் அவை மரபுக்கு உகந்தவை அல்ல என்பதாலும், இது அவையை அவமதிப்பதாகக் கருதுவதாலும், எதிர்காலத்தில் மற்ற உறுப்பினர்களுக்கு இது ஒரு பாடமாக அமையும் என்ற வகையில் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களை ஒரு நாள், அதாவது 12—4—2010 அன்று சட்டப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதிலிருந்து நீக்கி வைக்கலாம்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. கே.எஸ். விஜயகுமார், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் 12—4—2010 அன்று ஒரு நாள் மட்டும் அவைப் பணிகளில் இருந்து நீக்கி வைக்கப்படுகிறார்.

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9—4—2010 வரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைக்கப் பெற்றதை மறுபரிசீலனை செய்தல்—தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை அ.தி.மு.க. உறுப்பினர்கள் இரண்டு நாள் அவையில் கலந்துகொள்ளக் கூடாது என்ற தங்களுடைய அந்த முடிவை தயவுசெய்து சற்று தளர்த்தி, ஒரு நாள் என்ற அளவில் அதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவபுண்ணியம் போன்றவர்கள் எல்லாம்கூட என்னிடத்திலே காலையில் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது சற்று நேரத்திற்கு முன் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே எழுந்ததுகூட அதற்காகத்தான் இருக்குமென்று கருதுகிறேன்.